# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

* பன்னிரெண்டாம் வகுப்பு பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8 x 1 = 8

1. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக் காட்சித்துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித்துணிப்பு
இ) நடுக்காட்சித்துணிப்பு ஈ) காட்சி மறைவு

2. பொருத்துக :

| | | |
|---|---|---|
| அ) ஆமந்திரிகை | - | 1) பட்டத்து யானை |
| ஆ) அரசு உவா | - | 2) மூங்கில் |
| இ) கழஞ்சு | - | 3) இடக்கை வாத்தியம் |
| ஈ) கழை | - | 4) எடை அளவு |

அ) 3 1 4 2 ஆ) 4 2 1 3 இ) 1 2 3 4 ஈ) 4 3 2 1

3. தவறான இணையைத் தேர்வு.

| பா வகை | | இலக்கியம் |
|---|---|---|
| அ) விருத்தப்பா | - | நாலடியார் |
| ஆ) ஆசிரியப்பா | - | அகநானூறு |
| இ) கலிவெண்பா | - | தூது |
| ஈ) குறள்வெண்பா | - | திருக்குறள் |

4. திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதி உடையவர்
இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

5. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

6. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

7. "ஏழாவது அறிவு" என்னும் நூலின் ஆசிரியர்
அ) தமிழ்நதி ஆ) வெ.இறையன்பு இ) ஜெயமோகன் ஈ) புதுமைப்பித்தன்

8. 'மருட்கை' என்பதன் பொருள்
அ) சிறுமை ஆ) பெருமை இ) வியப்பு ஈ) மகிழ்ச்சி

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

10. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

11. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



12. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
13. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
14. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 x 4 = 12

15. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
16. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
17. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.
18. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
19. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

**IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

20. *தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*
    அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.
    ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
21. *ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
    அ) வெகுளி ஆ) அறுத்து
22. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*
    அ) தலைக்கோல் ஆ) பெருந்தேர்
23. *தமிழ்ப்படுத்துக :*
    அ) Animation ஆ) Debit card
24. *பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க :*
    புல் - புள்

**V. பெருவினா. (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக)** 2 x 5 = 10

25. அ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

26. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

**VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

27. அ) 'குழல்வழி' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
    ஆ) 'செயல்' என முடியும் குறளை எழுதுக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com